## பிட்டபெத்தர பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 22 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 14 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பிட்டபெத்தர பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிட்டபெத்தர பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 420,000 பெறுமதியான இரண்டு காணிக்கூறுகளின் கிரயம் மற்றும் பெறுமதி குறிப்பிடப்பாத மேலும் 2 காணிக்கூறுகளில் வயல் மற்றும் 2 கட்டிடங்களின் பெறுமதி என்பன 2012

திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் பிரதான அலுவலகக் கட்டிடத்திற்காக பக்கச் சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மாத்தறை மாவட்டப் பொறியியலாளரினால் 2010 ஏப்ரல் 22 ஆந் திகதி ரூபா 3,290,305 தொகையாக செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அச்செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 திசெம்பர் 18 ஆந் திகதி ரூபா 3,732,493 தொகை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட வீதிச் செப்பனிடுகையின் பெறுமதி மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மூலதன ஈடுபடுத்துதலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு மற்றும் நிலையான சொத்துக் கணக்கின் மீது என்பன சமமாக இருக்கவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் இரண்டு கணக்குகளுக்கிடையே ரூபா 3,500,000 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) முத்திரைக் கட்டண கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் 2012 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு முன்கொண்டுவரப்பட்ட நிலுவை மீதி ரூபா 979,163 ஆக இருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டிற்காக ரூபா 1,651,835 தொகை கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்காகக் கிடைத்த ரூபா 672,672 குறைவான ஒதுக்கீடுகளுக்காக உரிய கணக்குகள் சீராக்கப்படாமல் நடப்பாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) முத்திரைக் கட்டண வருமானப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நிலுவைத் தொகை ரூபா 2,660,257 ஆகும். அதற்காக நாட்குறிப்பு இலக்கம் 54 இன் மூலம் ஏனைய வருமானம் 1-60 வருமானத் தலைப்பில் ரூபா 3,667,543 தொகை செலவு வைக்கப்பட்டமையினால் வேறுபாடு ரூபா 1,007,286 ஆகக் காணப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட ரூபா 164,840 தொகையான மிகைக்கட்டண செலவினம் மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) சபையின் உறுப்பினர்களின் உறுப்பினர் படிகளுக்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 623,810 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் கொடுப்பனவிலிருந்து மோட்டார் சைக்கிள் கடன் தவணைப் பணமாக ரூபா 372,140 தொகை கழிக்கப்பட்டு ஆண்டின் போது செலுத்தப்பட்ட தேறிய தொகையான ரூபா 251,670 மாத்திரம் சம்பளச் செலவின விடயத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது சபையின் 10 உறுப்பினர்களுக்காக மோட்டார் சைக்கிள் கடனுக்காக அறவிடப்பட்ட ரூபா 372,140 தொகை வருமானமாக இருந்த போதிலும் அது கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) ஆண்டின் போது ரூபா 2,547,509 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட வழங்கல் மற்றும் உபகரணங்கள் விநியோகிக்கும் போது உரிய ஒவ்வொரு செலவினத் தலைப்பிற்கும் விநியோகப்பத்திரம் மூலம் வரவு வைத்தல் மேற்கொள்ளப்படாது ஆரம்ப இருப்பில் கொள்வனவுகள் சேர்க்கப்பட்டு இறுதியிருப்பு கழிக்கப்பட்டு பெறப்பட்ட பெறுமதி ஆண்டின் செலவினமாக வருமானச் செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 12,512,106 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 12,606,049 ஆனமையால் ரூபா 93,938 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 தீர்க்கப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் போது 05 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 240,145 தொகையான வரவு மீதி மற்றும் ரூபா 1,934,630 தொகையான செலவு மீதி என்பன தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 35,540,560 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,404,174 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,341,737 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 606 | 660 | 1,380 |
| (ii) | வாடகை | 3,770 | 3,093 | 1,070 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 280 | 305 | 70 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,910 | 17,813 | 52,481 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 672,338 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,994,782 |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் கிடைக்க வேண்டிய ரூபா 550,999 தொகையான வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 218 | சபைக்குரிய சகல காணி மற்றும் கட்டிடங்களில் வருடத்திற்கு ஒரு தடவை பரீட்சிப்பதற்கு தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

2005 மார்ச் 31 ஆந் திகதிய 08/2005 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 11.5 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனக் கடனுக்காக வங்கி வட்டி வீதம் மற்றும் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படுகின்ற 4 சதவீத வட்டி வீதம் என்பவற்றுக்கிடையேயான வேறுபாடு அரசாங்கத்தின் மூலம் மீளளிக்கப்பட வேண்டும். எனினும் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்காக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 202,723 தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2008 ஒக்தோபர் 23 ஆந் திகதிய தபபா/ஆ/5/6 ஆம் இலக்க கடிதத்தில் சபையின் உறுப்பினர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளுக்காக சிட்டைகள் வழங்கும் போது அந்த உறுப்பினர்களுக்கு தொலைபேசி இணைப்பைப் பெற்றிருந்தமையை உறுதிப்படுத்திக் கொண்டு மாதாந்தம் ரூபா 1,000 தொகையான சிட்டைகள் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்க வேண்டியிருந்த போதிலும் அந்த நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை உறுப்பினர்களுக்காக மாத்திரம் உரிய சிட்டைகள் வழங்க வேண்டுமென கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக பிரதேச சபையின் செயலாளருக்கு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 6,000 பெறுமதியான சிட்டைகள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தன.

(இ) 2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய 1807/2 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் தலைவருக்கு, உப தலைவருக்கு அல்லது பொதுமக்கள் பிரதிநிதியாக கையளிக்கப்பட்ட செயற்பாடுகள்/ சபையினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பிரயாணம் செய்யும் போது ஏற்படுகின்ற செலவினங்களை மீளளிக்கும் வகையில் ஒரு மாதத்திற்கு ரூபா 3,000 ஆகக்கூடிய எல்லையின் கீழ் பிரயாணச் செலவுப் படிகளைச் செலுத்த முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு எவ்வித செயற்பாடுகளும் கையளிக்கப்படாது தலைவரை உள்ளடக்கிய 10 உறுப்பினர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 360,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**2.6 உள்ளகக் கணக்காய்வு**

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) வருமான நிருவாகம்